# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:121 ★01.09.2026 ★தமிழ் நாளிதழ் ★செவ்வாய்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:121 ★01.09.2026 ★TamilDaily ★Tuesday ★Page-4 ★Price-₹5/- Chennai



**தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


# "குரும்பர் (குருமன்ஸ்) சமூகத்திற்கு தொடரும் மாபெரும் அநீதி"

## வரலாற்று சான்றுகள் உறங்கும் நிலத்தில் பழங்குடி உரிமைகள் மறுப்பா? நீதிமன்ற உத்தரவையும் அலட்சியப்படுத்தும் அரசு

உலகின் மிக தொன்மையான பழங்குடி இனங்களில் ஒன்றான குரும்பர் (குருமன்ஸ்) சமூகம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் மாபெரும் கோட்டைகளை கட்டி, தொண்டை மண்டலத்தை சிறப்பாக ஆட்சி செய்த வரலாற்று பின்னணி கொண்டதாகும்.

பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் சர்வேயர் ஜெனரல் காலின் மெக்கன்ஸி தனது கையினால் எழுதிய வரலாற்று சிறப்புமிக்க குறிப்புகள் இன்றும் சென்னை ஓரியண்டல் வரலாற்று சுவடிகள் நூலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அக்குறிப்புகள் மட்டுமன்றி, வரலாற்று ஆசிரியர் DR. K.V. ராமன் அவர்களின் வரலாற்று நூல்களும், தொண்டை கோட்டங்கள் பற்றிய வரலாற்று பதிவுகளும், 5ஆம் நூற்றாண்டு வாக்கில் பல்லவ வம்சத்தின் வழிவந்த குரும்பர்கள் (குருபா/குரும்பர்) தொண்டை மண்டலத்தை 24 கோட்டங்களாக பிரித்து (புழல் கோட்டம் உட்பட) ஆட்சி செய்தனர் என்பதை தெளிவாக பறைசாற்றுகின்றன.

அண்மையில் சென்னை பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள் நெரும்பூர் மற்றும் பாலாற்றங்கரையில் நடத்திய அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட இரும்புக்கால தொல்பொருட்கள், கருப்பு சிவப்பு பானை ஓடுகள் மற்றும் மெக்கன்ஸியால் தொகுக்கப்பட்ட வரலாற்று ஆவணங்கள் யாவும் "குறும்பு" மற்றும் கோட்டைகளை கட்டி வாழ்ந்த குரும்பர் சமூகத்தின் செழுமையான நாகரிக வரலாற்றை உறுதிப்படுத்துகின்றன.

பல்லவர் காலம் தொட்டு செஞ்சிக் கோட்டை, புதுக்கோட்டை, குடும்மியான்மலை, தஞ்சாவூர் மிழலை நாடு, தருமபுரி, கிருஷ்ணகிரி என பல்வேறு நிலப்பரப்புகளில் ஆட்சி செலுத்தி, பின் நாட்களில் சோழர்களின் வீழ்ச்சிக்கு பிறகு நீலகிரி மற்றும் வயநாடு மலைக் காடுகளில் தஞ்சம் புகுந்த இச்சமூக மக்கள், ஆடு மேய்த்தல் மற்றும் கம்பளி நெய்தலை தங்களின் முதன்மை தொழிலாக கொண்டு வாழ்ந்து வந்ததாக பல சென்சஸ் ஆவணங்களும் வரலாற்று சான்றுகளும் நிரூபிக்கின்றன. இத்தகைய தொன்மை வாய்ந்த பெருமைமிகு குரும்பர் (குருமன்ஸ்) பழங்குடி இனத்திற்கு இன்றுவரை ஒரு சட்டமன்ற உறுப்பினரோ (MLA), நாடாளுமன்ற உறுப்பினரோ (MP), ஐ.ஏ.எஸ் அல்லது ஐ.பி.எஸ் அதிகாரியோ கூட இல்லாதது பேரதிர்ச்சியை அளிப்பதோடு, சுதந்திர இந்தியாவில் இச்சமூகத்திற்கு இழைக்கப்படும் மாபெரும் சமூக அநீதியாகும். சுமார் 50 லட்சத்திற்கும் மேற்பட்ட ஓட்டுகளை பெற்று அதிகாரத்திற்கு வரும் மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்றத்திலோ அல்லது பாராளுமன்றத்திலோ இவர்களின் நியாயமான குரலை எழுப்பாமல் தொடர்ந்து புறக்கணித்து வருகின்றனர்.

தேர்தலில் ஓட்டுக்காக மட்டும் இவர்களை பயன்படுத்திக் கொண்டு, சாதிச் சான்றிதழ் போன்ற அடிப்படை வாழ்வாதார கோரிக்கைகள் வரும் போது அலட்சியம் காட்டுவது எந்த வகையில் நியாயமாகும்? மத்திய அரசு 1950ஆம் ஆண்டின் ஆவண பதிவுகளின் படி, மலையாளி / மலையாளி கவுண்டர் என்ற பழங்குடியினரின் 75 உள் பெயர்களுக்கும், இருளர் இனத்தின் 20க்கும் மேற்பட்ட பெயர்களுக்கும் நாடாளுமன்றச் சட்ட திருத்தம் மூலம் ST அந்தஸ்து வழங்கி, தமிழக அரசும் அதற்கேற்ப சான்றிதழ்களை வழங்கி வருகிறது. ஆனால், அதே வரலாற்று பின்னணி கொண்ட குருமன்ஸ் பழங்குடியினரின் ஒத்த பெயர்களான "குரும, குருமா, குருமன், குறும்பா, குரும்ப கவுண்டர், குரும்பன், குரும்பர்" ஆகிய பெயர்களை குருமன்ஸ் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மாநில அரசு மீண்டும் புதிய பரிந்துரையை மத்திய அரசுக்கு அனுப்ப மறுப்பது ஏன் என்ற கேள்வி எழுகிறது. சென்னை உயர்நீதிமன்றத்தின் தெளிவான உத்தரவுகள் மற்றும் ஊட்டி பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் (TBRC) இயக்குநர்கள் அரசுக்கு சமர்ப்பித்துள்ள கலாச்சார கள ஆய்வு அறிக்கைகளின் அடிப்படையிலும் கூட, குருமன்ஸ் ST சான்றிதழ் வழங்க அதிகாரிகள் முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். முதலமைச்சர் தனிப்பிரிவு (C.M. CELL), சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்கள் மற்றும் செயலாளர்களுக்கு எண்ணற்ற மனுக்கள் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் இன்றி மனுக்கள் நிராகரிக்கப்படுவதோடு, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI) கீழ் கேட்கப்படும் கேள்விகளுக்கும் ஏமாற்று பதில்களே வழங்கப்படுகின்றன.

மனு அளித்தால் 30 நாட்களுக்குள் உரிய வழிகாட்டுதலின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற அரசு விதியை அதிகார வர்க்கம் மெத்தனமாக புறக்கணிப்பது ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை தகர்க்கிறது. ஆந்திர மாநிலத்தில் பழங்குடியினரின் கலை, கலாச்சாரம், பண்பாடு, குலதெய்வம் ஆகியவற்றை சரியாக ஆய்வு செய்து முறையாக ST சான்றிதழ் வழங்கப்படும் சூழலில், தமிழகத்தில் மட்டும் ஒரே பழங்குடியினரை சென்சஸ் குழப்பங்களால் பல்வேறு பெயர்களில் பிரித்து, தகுதியான பழங்குடி மக்களுக்கு சான்றிதழ் மறுக்கப்பட்டு, அவர்கள் நீதிமன்ற படிகளையே மீண்டும் மீண்டும் ஏற வேண்டிய அவலநிலை நீடிக்கிறது.

இத்தனை அடக்குமுறைகளுக்கும் அலட்சியங்களுக்கும் இடையே, பழங்குடியினரின் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய அரசே அவர்களை சட்டத்திற்கு புறம்பாக ஒடுக்குவது சமூக நீதிக்கு முற்றிலும் எதிரானது. "சாது மிரண்டால் காடு கொள்ளாது; காடு மிரண்டால் நாடு கொள்ளாது" என்ற பழமொழிக்கு ஏற்ப, பழங்குடி மக்களின் கொந்தளிப்பிற்கு இடம் தராமல், தமிழக அரசு உடனடியாக தலையிட வேண்டும். குருமன்ஸ் பழங்குடி மக்களின் கோரிக்கைகளை முழுமையாக பரிசீலித்து, சாதிச் சான்றிதழ் குழப்பங்களை தீர்க்கவும், அவர்களின் வாழ்வியல் உரிமைகளை மீட்டெடுக்கவும் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் உரிய ஆணையம் அமைத்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே வரலாற்று சான்றுகளோடு நீதிக்காக காத்திருக்கும் குரும்பர் (குருமன்ஸ்) சமூகத்தின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பாகும்.

# பாரத்நெட் திட்டத்தில் தொழில் பங்கீட்டாளர்களாக சேர வாய்ப்பு: வருவாய் தகுதி ரூ.50 லட்சத்தில் இருந்து ரூ.20 லட்சமாக குறைப்பு

## செப்.10 வரை விண்ணப்பிக்கலாம்

பாரத்நெட் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் உயர்தர இணைய சேவைகளை வழங்குவதற்காக மாவட்ட அளவிலான தொழில் பங்கீட்டாளர்களை (District Level Franchisee Partners – DLFP) தேர்வு செய்யும் பணியில், விண்ணப்பதாரர்களின் நிதித் தகுதி விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளதாக திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET), பாரத்நெட் திட்டத்தின் மூலம் மாநிலம் முழுவதும் கிராமப்புறங்களுக்கு தடையில்லா உயர்தர இணைய சேவையை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்காக மாவட்ட அளவில் தொழில் பங்கீட்டாளர்களை தேர்வு செய்ய கடந்த ஜனவரி 1ம் தேதி அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. இந்நிலையில், அதிகளவிலான விண்ணப்பதாரர்கள் பங்கேற்கும் வகையில் நிதித் தகுதி விதிமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த 3 நிதியாண்டுகளின் சராசரி ஆண்டு வருவாய் ரூ.50 லட்சம் மற்றும் அதற்கு மேல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. தற்போது இந்த வருவாய் தகுதி ரூ.20 லட்சம் மற்றும் அதற்கு மேல் என தளர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் பங்கீட்டாளர்கள்

தமிழ்நாட்டில் பாரத்நெட் திட்டப் பணிகள் சுமார் 96 சதவீதம் நிறைவடைந்துள்ளன. மாநிலத்தில் உள்ள 37 மாவட்டங்களிலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைந்தபட்சம் 2 தொழில் பங்கீட்டாளர்களை தேர்வு செய்து, கிராமப்புறங்களில் தடையில்லா இணைய சேவையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டமும் வருவாய் உட்கோட்டத்தின் அடிப்படையில் 2 முதல் 6 வட்டாரங்களை உள்ளடக்கிய துணைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, அந்தந்த துணைப் பிரிவுகளுக்கு தொழில் பங்கீட்டாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். ஒரு விண்ணப்பதாரர் அதிகபட்சமாக 2 மாவட்டங்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்கமுடியும். அவ்வாறு விண்ணப்பிக்கும் மாவட்டங்கள், சம்பந்தப்பட்ட நிறுவனம் அல்லது தனிநபர் செயல்படும் மாவட்டமாகவோ அல்லது அவர்களின் முகவரி அமைந்துள்ள மாவட்டமாகவோ இருக்க வேண்டும்.

தொழில் பங்கீட்டாளர்களின் முக்கிய பணிகள்

தேர்வு செய்யப்படும் தொழில் பங்கீட்டாளர்கள், கண்ணாடி இழை கேபிள் (OFC) மற்றும் Optical Network Terminal (ONT) ஆகியவற்றை பராமரித்தல், தடையில்லா இணைய சேவையை உறுதி செய்தல், சேவை பாதிப்புகளை விரைவாக சரிசெய்தல், Service Level Agreement (SLA) விதிமுறைகளை பின்பற்றுதல் மற்றும் இணைய சேவையின் தரத்தை தொடர்ந்து பராமரித்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

செப்.10 வரை விண்ணப்பிக்கலாம்

தொழில் பங்கீட்டாளர் தேர்வுக்கான விண்ணப்பங்களை TANFINET இணையதள போர்டல் மூலம் செப்டம்பர் 10, 2026 வரை சமர்ப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் அறிவிப்பு மற்றும் தொடர்புடைய ஆவணங்களை பதிவிறக்கம் செய்து, தேவையான ஆவணங்களை பதிவேற்றம் செய்து, தாங்கள் செயல்பட விரும்பும் துணைப் பிரிவை தேர்வு செய்ய வேண்டும்.

ஒவ்வொரு துணைப் பிரிவுக்கும் ரூ.25,000 திரும்பப்பெற க்கூடிய, வட்டியில்லா விண்ணப்ப பாதுகாப்பு வைப்பு தொகை செலுத்த வேண்டும். தேர்வு செய்யப்படும் தொழில் பங்கீட்டாளர்கள், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ.2 லட்சம் பாதுகாப்பு வைப்பு தொகையை செலுத்திய பின்னர் TANFINET தலைமையகத்தால் பணி ஆணை வழங்கப்படும். ஏற்கனவே விண்ணப்பித்து கட்டணம் செலுத்தியவர்கள் அதே வருவாய் உட்கோட்டத்திற்கு மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை. அவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. இருப்பினும், அதே மாவட்டத்தில் உள்ள பிற துணைப் பிரிவுகளுக்கு அவர்கள் விண்ணப்பி க்கலாம்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ள ப்பட்டுள்ளனர். மேலும், விண்ணப்பம் தொடர்பான சந்தேகங்களுக்கு 04424965595 என்ற மாநில அளவிலான தொடர்பு எண்ணில் அலுவலக வேலை நாட்களில், அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

### தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் பள்ளிக்கல்வித்துறை சார்பில்

# அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி தலைமையாசிரியர்களுடனான மீளாய்வுக்கூட்டம்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில், இன்று (31.08.2026) பள்ளிக்கல்வித்துறை சார்பில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி தலைமையாசிரியர்களுடனான மீளாய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில், தேனி மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் இடைநிற்றலின்றி தொடர்ந்து கல்வி பயின்று, 100% தேர்ச்சி பெற்று, உயர்க்கல்வி பயில வேண்டுமென்ற உயர்ந்த நோக்கில், மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒருபகுதியாக, நடைபெற்று முடிந்த 20262027 கல்வியாண்டிற்கான முதல் பருவத்தேர்வில் தேர்ச்சி சதவீதம் குறைவாக உள்ள பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் குறைவதற்கான காரணங்களை கண்டறிந்து, அதனை உடனடியாக நிவர்த்தி செய்து, இனிவரும் தேர்வுகளில் 100% மாணவர்கள் தேர்ச்சி அடைவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். மேலும், பள்ளிகளில் இடைநிற்றல் மாணவர்கள் இருக்கும்பட்சத்தில், இடைநின்ற மாணவர்களையும் மற்றும் அவர்களின் பெற்றோர்களையும் உடனடியாக நேரில் சந்தித்து உரிய ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை வழங்கி மீளப் பள்ளியில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எனவே, பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி நமது மாவட்டம் 100% தேர்ச்சி பெற்ற மாவட்டம் என்ற நிலையை எட்டுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார். இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.முருகன், மாவட்ட கல்வி அலுவலர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மக்கள் குறைதீர்வு கூட்டத்தில் 6 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.23,055 மதிப்பில் நலத்திட்ட உதவிகள்

## 3 பேருக்கு வீட்டுமனை பட்டா வழங்கிய கலெக்டர் வந்தனா கார்க்

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (ஆக.31) நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து 850 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் பெற்றுக்கொண்டு, அவற்றின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.



மக்கள் குறைதீர்வு கூட்டத்தில் கல்வி உதவித்தொகை, வங்கிக் கடனுதவி, முதியோர் மற்றும் விதவைஉதவித்தொகை, வீட்டுமனை பட்டா, சாதிச்சான்று, வேலை வாய்ப்பு, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை மற்றும் உதவி உபகரணங்கள், சாலை வசதி, பிரதமரின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், வேளாண் பயிர்க்கடன், புதிய நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல், தாட்கோ கடனுதவி, கூட்டுறவு சங்கங்கள் மூலம் பயிர்க்கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான 850 மனுக்கள் பெறப்பட்டன.

பெறப்பட்ட மனுக்கள் மீது காலதாமதமின்றி உரிய நடவடிக்கை மேற்கொண்டு, தகுதியான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் கிடைப்பதை உறுதி செய்யுமாறு அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

6 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.23,055 மதிப்பில் உதவிகள்

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் உதவி உபகரணங்கள் கோரி மனு அளித்தவர்களின் கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 6 மாற்றுத்திறனாளிகளுக்கு மொத்தம் ரூ.23,055 மதிப்பிலான உதவி உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். இதில், ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூ.15,624 மதிப்பிலான காலிப்பர், ஒரு காதுகேளாத மாற்றுத்திறனாளிக்கு ரூ.3,285 மதிப்பிலான காதொலி கருவி, 2 கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.634 மதிப்பிலான மடக்குக் குச்சிகள் மற்றும் 2 கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3,512 மதிப்பிலான பிரெய்லி கைக்கடிகாரங்கள் வழங்கப்பட்டன. மேலும், வீட்டுமனை பட்டா கோரி பெறப்பட்ட மனுக்களின் அடிப்படையில் தகுதியான 3 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாவிற்கான ஆணைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். மாணவி சேமித்த பணம் நேபாள பேரிடர் நிதிக்கு திருவண்ணாமலை அரசு மாடர்ன் பள்ளியில் 11ம் வகுப்பு பயிலும் மாணவி லிக்கிதா, தான் சேமித்து வைத்திருந்த ரூ.1,017ஐ நேபாள பேரிடர் நிதிக்காக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க்கிடம் வழங்கினார்.

செய்யாறு, ஆரணியிலும் குறைதீர்வு கூட்டம்

செய்யாறு சார்ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 99 மனுக்களும், ஆரணி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 89 மனுக்களும் பெறப்பட்டன. இம்மனுக்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கப்பட்டன.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு) இளவரசன் உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தேச பக்தி

01.09.2026 செவ்வாய்கிழமை

## விநாயகர் சிலைகள் தூய களிமண்ணால் மட்டுமே இருக்க வேண்டும்; சிலை கரைப்பில் விதிமீறல் கூடாது

### திருவண்ணாமலை ஆட்சியர் உத்தரவு

வரும் செப்டம்பர் 14 ஆம் தேதி நடைபெற உள்ள விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தலைமையில் இன்று (31.08.2026) மாவட்ட





ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

கூட்டத்தில், விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு காவல்துறை சார்பில் மேற்கொள்ள வேண்டிய சட்டம்–ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. மேலும், விநாயகர் சிலைகளை நிறுவுதல், வழிபாடு நடத்துதல் மற்றும் நீர்நிலைகளில் கரைப்பது தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை அனைவரும் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். மாநகராட்சி, நகராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளில் விநாயகர்சிலைகள்கரைக்கப்படும் நீர்நிலைகளில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தேவையான பாதுகாப்பு கட்டமைப்புகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

மேலும், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் விதித்துள்ள விதிமுறைகளின்படி, விநாயகர் சிலைகள் தூய களிமண்ணால் மட்டுமே தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய பொருட்களை பயன்படுத்தக் கூடாது என்றும் அறிவுறுத்தினார்.

விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் கரைக்கும் போது அரசு விதிமுறைகளை முறையாகபின்பற்றுவதைஉறுதி செய்ய வேண்டும் என்றும், சிலை நிறுவுதல் முதல் கரைப்பு வரை அனைத்து நிலைகளிலும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உரிய கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா.உதயகுமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் பூ.காஞ்சனா, வருவாய் கோட்டாட்சியர்கள் செல்வம் (திருவண்ணாமலை), சிவா (ஆரணி), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராமகிருஷ்ணன், அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் இணை ஆணையர் பரணிதரன் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடிபோல்டன் புரத்தில்

## தூத்துக்குடி வடக்கு மாவட்ட ஆதித்திராவிடர் நலக்குழு திமுக அமைப்பாளர் பரமசிவன் இல்ல புதுமனை புகு விழா

### மாநகர திமுக செயலாளர் ஆனந்த சேகரன் பங்கேற்பு





தூத்துக்குடி போல்டன் புரத்தில் தூத்துக்குடி மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் பரமசிவன் அண்ணன் எம்பெருமான் இல்ல புதுமனை புகு விழாவில் தூத்துக்குடி மாநகர திமுக செயலாளர் ஆனந்த் சேகரன் பங்கேற்று வாழ்த்தினார்

அதிமுக தெற்கு மாவட்ட எம்ஜி ஆர்மன்ற செயலாளர்எம்பெருமாள் இல்லபுதுமனைபுகுவிழா நடைபெற்றது இவ்விழாவில், தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் எஸ் பி சண்முகநாதன், , கழக அமைப்புச் செயலாளர் சின்னத்துரை, முன்னாள் எம்பி நட்டார்ஜி, முன்னாள் நகர மன்ற தலைவர் இரா, ெ ஹன் றி , தூத்துக்குடி மாநகர திமுக செயலாளர் ஆனந்த சேகரன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக ஆதி திராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர்பரமசிவன், தூத்துக்குடி வீட்டு வசதி சங்க தலைவர் வழக்கறிஞர் ஆறுமுகம், திமுக பிரமுகர் பாஸ்கர் மணிகண்டன் பாலமுருகன் உட்பட ஏராளமானோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்

### மாவட்ட ஆட்சித் தலைவர் ப்ரியா ரவிச்சந்திரன், தலைமையில்

## இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள் கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ப்ரியா ரவிச்சந்திரன், தலைமையில் நடைபெற்றது.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் ப்ரியா ரவிச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர்அலுவலககூட்டரங்கில் நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்தும், மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு குறைகளை கேட்டறிந்தார்கள். மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வருவாய்த்துறை நிலப்பட்டா குறைகள், பட்டா மாறுதல், இலவசவீட்டு மனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை வேளாண்மைத் துறை, காவல் துறை. ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகங்கள், பேரூராட்சித்துறை. கூட்டுறவு. மின்சாரத்துறை சார்பான குறைகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கிராம பொதுப் பிரச்சனைகள், குடிநீர் வசதி, வேலைவாய்ப்பு வேண்டி மனுக்கள் மற்றும் பொதுநலன் குறித்த 522 மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெற்றுக் கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு தகுதியானதாக இருப்பின் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் மற்றும் மனு நிராகரிப்பிற்கான காரணங்களையும் மனுதாரர்களுக்கு வழங்கிட வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சரவணன். திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை செல்வராணி, சமூக பாதுகாப்பு திட்டம் தனித் துணை ஆட்சியர் கீதாலட்சுமி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மீனா, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பூமா, நேர்முக உதவியாளர் (நிலம்) சுமதி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செந்தில் குமாரி மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



### நத்தம் அருகே

## FQL முதலீட்டு மோசடி: இளைஞர் தற்கொலை

நத்தம் அருகே காசம்பட்டி பகுதியில் FQL செயலி மூலம் முதலீடு செய்து பணத்தை இழந்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

FQL செயலி மூலம் முதலீடு செய்தால் பணம் இரட்டிப்பாக கிடைக்கும் எனக் கூறப்பட்டதை நம்பி பலர் பணம் முதலீடு செய்ததாகவும், பின்னர் செயலி செயல்படாமல் போனதால் முதலீட்டாளர்கள் பணத்தை இழந்ததாகவும் புகார்கள் எழுந்துள்ளன. நத்தம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், காசம்பட்டி பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் FQL முதலீட்டில் பணத்தை இழந்த விரக்தியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து நத்தம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### TNPSC GroupII தேர்வுக்கு இலவச பயிற்சி வகுப்புகள்:

## செப்.1 முதல் திருவண்ணாமலையில் தொடக்கம் - மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர்தேர்வாணையம் (TNPSC) சார்பில் நடைபெற உள்ள தொகுதிII பணியிடங்களுக்கான முதல்நிலைத் தேர்வை எதிர்கொள்ளும் தேர்வர்களுக்கு திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

TNPSC தொகுதிII பணியிடங்களுக்கான முதல் நிலைத் தேர்விற்கான அறிவிப்பு ஆகஸ்ட் 11, 2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இத்தேர்வுக்கு பட்டப்படிப்பு முடித்தவர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். தேர்வு தொடர்பான கல்வித் தகுதி, வயது வரம்பு, விண்ணப்பிக்கும் முறை உள்ளிட்ட முழுமையான விவரங்களை www.tnpsc.gov.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் தன்னார்வ பயிலும் வட்டம் சார்பில், தேர்வர்களின் நலனை கருத்தில் கொண்டு செப்டம்பர் 1, 2026 முதல் வார நாட்களில் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன. இந்த பயிற்சி வகுப்புகள் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை சிறந்த பயிற்றுநர்களைக் கொண்டு 'டிஜிட்டல் போர்டு' வசதியுடன் நடத்தப்படும். TNPSC GroupII தேர்வில் வெற்றி பெற விரும்பும் ஆர்வமுள்ள தேர்வர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இலவச பயிற்சி வகுப்பில் சேர விரும்புவோர் நேரடியாக திருவண்ணாமலை மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை அணுகலாம். மேலும், 04175 233381 என்ற அலுவலக தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தங்களது பெயரை பதிவு செய்து பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.



## பழநி பாலசமுத்திரம் அகோபில வரதராஜப் பெருமாள் கோயில் ஆவணி பிரம்மோற்சவ திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம்

பழநி பாலசமுத்திரம் அகோபில வரதராஜப் பெருமாள் கோயில் ஆவணி பிரம்மோற்சவ திருவிழாவின் முக்கிய



நிகழ்ச்சியான தேரோட்டம் நேற்று நடந்தது. பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உபகோயிலான பாலசமுத்திரம் அகோபில வரதராஜப் பெருமாள் கோயிலில் ஆவணி பிரம்மோற்சவ திருவிழா ஆக.23ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தினமும் பக்தி சொற்பொழிவு மற்றும் சுவாமி வீதியுலா நடந்து வருகிறது. விழாவின் 7ம் நாளான ஆக.29ம் தேதி அகோபில வரதராஜப் பெருமாள், ஸ்ரீதேவி மற்றும் பூதேவிக்கு திருக்கல்யாண வைபவம் நடந்தது. விழாவின் முக்கிய நிகழ்வான நேற்று காலை தேரோட்டம் நடந்தது. முன்னதாக, பெருமாள் மற்றும் அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் நடைபெற்றது. பின்னர், தேரேற்றம் நடந்தது. தொடர்ந்து, பக்தர்களின் 'கோவிந்தா' முழக்கத்துடன் தேரோட்டம் கோலாகலமாக நடந்தது. கோயில் இணை ஆணையர் (பொ) வெங்கடேஷ், உதவி செயற்பொறியாளர் கண்ணன், கண்காணிப்பாளர் அழகர்சாமி உட்பட திரளான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர். இன்று கொடியிறக்குதல், நாளை (செப்.2) விடையாற்றி உற்சவத்துடன் விழா நிறைவு பெறுகிறது.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டரங்கில் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா மாற்றுத்திறனாளிகளிடமிருந்துகோரிக்கைமனுக்களைப்பெற்றுக்கொண்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை வாயிலாக 5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.4.69 இலட்சம் மதிப்பீட்டில் நவீன செயற்கை கால்களை வழங்கினார். தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி) வெங்கடேசன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள்நலஅலுவலர்குமார்மற்றும்துறைசார்ந்தஅலுவலர்கள் உடனிருந்தனர்.

## மாநில அளவிலான சிலம்ப போட்டி; 800க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்பு;





தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு, தேனி மாவட்டம் உத்தமபாளையம் தாலுகா சின்னமனூரில் உள்ள பி. எஸ். முத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பிரம்மாண்ட மாநில அளவிலான சிலம்ப போட்டி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

உலக சிலம்ப விளையாட்டு சங்கம் மற்றும் வீரமங்கை வேலுநாச்சியார் சிலம்ப கலைக்கூடம் & அகாடமி இணைந்து நடத்திய இப்போட்டிக்கு, உலக சிலம்ப விளையாட்டு சங்க மாவட்ட செயலாளரும் வீரமங்கை வேலுநாச்சியார்சிலம்பகலைக்கூடத்தின் ஆசானுமான ஈஸ்வரன் தலைமை தாங்கினார்.

உலக சிலம்ப விளையாட்டு சங்க மாநில தலைவர் சுதாகர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு போட்டிகளை முறைப்படி தொடங்கி வைத்தார். இப்போட்டியில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருப்பூர் உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து 4 வயது முதல் 14 வயது வரையிலான 800க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது சிலம்ப திறமைகளை வெளிப்படுத்தினர்.

காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை தகுதிவாய்ந்த நடுவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இப்போட்டியில், வயது வாரியாக பிரித்து சுற்றுகள் நடத்தப்பட்டன.

வெற்றிபெற்றமாணவ, மாணவிகளுக்கு முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளும், பங்கேற்பு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மேலும், மிகச்சிறப்பாக விளையாடிய வீரர், வீராங்கனைகளுக்கு 'ஆட்டநாயகன்' விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவ்விழாவில் பி.எஸ். முத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உரிமையாளர் முத்து கல்வன் , போட்டியாளர்களின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு போட்டிகளை கண்டு ரசித்து வீரர்களை உற்சாகப்படுத்தினர்.

# ராணிப்பேட்டை புனித ஆரோக்கிய அன்னை ஆலய 96 ஆம் ஆண்டு பெருவிழா; 29ம் தேதி மாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது

## விழாவில் திரளான பக்தர்கள் பங்கேற்றனர்

ராணிப்பேட்டை புனித ஆரோக்கிய அன்னை ஆலய 96 ஆம் ஆண்டு பெருவிழா 29ம் தேதி மாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது விழாவில் திரளான பக்தர்கள் பங்கேற்றனர்

ராணிப்பேட்டை புனித ஆரோக்கிய அன்னை ஆலய 96 ஆம் ஆண்டு பெருவிழா 29ம் தேதி மாலை 6.45 மணியளவில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. இந்த தொடக்க விழாவில் திரளான பக்தர்கள் பல்வேறு பகுதிகளில் இருந்து கலந்துகொண்டு ஆரோக்கியஅன்னையை வழிபட்டு சென்றனர். ராணிப்பேட்டை புனித ஆரோக்கிய அன்னை ஆலய 96 ஆம் ஆண்டு பெருவிழா 29 ம் தேதி மாலை கொடியேற்றத்துடன் தொடங்கி வருமாக எடுத்துச்செல்லப் பட்டது.இதனைஅடுத்து புனித ஆரோக்கிய அன்னை ஆலய வளாகத் திலுள்ள கொடிக்கம்பத்தில் புதிய திருக்கொடி கம்பத்தில்புனித ஆரோக்கிய அன்னையின் திரு உருவக் கொடியை அதிர் வேட்டு முழங்க ஆலய மணியோசைகள் முழக்கங்களுடன்புதிய பங்குத் தந்தை ஞானசேகரன் தலைமையில் அருட்தந்தையர்கள்பெர்க்மான்ஸ், இருதயராஜ் ஆகியோர் முன்னிலையில் அரக்கோணம் அருட்தந்தை எஸ். மலையப்பன் ஏற்றி வைத்து பாடல் திருப்பலி பூஜையை நிகழ்த்தினார்.

தொடக்க விழாவில் ராணிப்பேட்டை, காரை, அவரக்கரை, கொண்டகுப்பம், வாலாஜா, வாலாஜா இலங்கை அகதிகள் முகாம், அம்மூர், லாலாப்பேட்டை, ஆற்காடு இறைமக்கள் உள்பட திரளான பக்தர்கள் கலந்துகொண்டு ஆரோக்கிய அன்னையை வழிபட்டு சென்றனர். இதனைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை 30 ம் தேதி முதல் வரும் செப்டம்பர் 8 ம் தேதிவரை தினமும் மாலையில் ஜெபமாலைகள், திருப்பலி பூஜைகள், மறையுறைகள், தியானம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் பல்வேறு அருட்தந்தையர்களால் நடத்தப்படுகிறது.

செப்டம்பர் 7 ம் தேதி மாலை திவ்ய நற்கருணையின் சிறப்பு பவனி, திருப்பலி பூஜை, திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் இராமேஸ்வரம் பாலிடெக்னிக்கல்லூரி முனைவர் தந்தை எழிலரசன் தலைமையில் நடைபெறுகிறது.

செப்டம்பர் 8 ம் தேதி புனித ஆரோக்கிய அன்னை ஆலய 96 ஆம் ஆண்டு பெருவிழா வெகு விமரிசையாக நடைபெறுகிறது. அன்று காலை 8 மணிக்கு பெருவிழா திருப்பலி பூஜை மற்றும் சிறுவர் சிறுமியருக்குபுதுநன்மை வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகள் வேலூர் மறை பொருளாளர் தந்தை எ.ரிச்சர்ட் பெரைரா தலைமையில் சிறப்பு கூட்டு பாடற் திருப்பலிப்பூஜை நடைபெறுகிறது.

அன்று மாலையில் புனித ஆரோக்கிய அன்னை ஆலய 96 ஆம் ஆண்டு பெருவிழாதிருப்பலி பூஜையை பங்குத் தந்தை ஞானசேகரன் தலைமையில் ராணிப்பேட்டை அருட்தந்தையர்கள் ராய்ஸ், வெஸ்லி, ஜெயக்குமார், பார்த்தசாரதி, சாமிநாதன், பால்ராஜ் ஆகியோர் நிகழ்த்தி இதனைத் தொடர்ந்து இரவு சிறப்பு வண்ண மின்விளக்குகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பட்ட திருத்தேரில் ஆரோக்கிய அன்னை திருஉருவம் தாங்கிய தேர்பவனியை பங்குத் தந்தை ஞானசேகரன் தொடங்கி வைக்கிறார். மேற்கண்ட இந்த புனித ஆரோக்கிய அன்னை ஆலய 96 ஆம் ஆண்டு பெருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு புனித ஆரோக்கியஅன்னையை வழிபட்டு செல்கின்றனர்.



இந்த புனித ஆரோக்கிய அன்னை ஆலய ஆண்டு பெருவிழா ஏற்பாடுகளை பங்குத்தந்தை ஞானசேகரன் மற்றும் ராணிப்பேட்டை புனித லொயோலா அருட்தந்தையர்கள் புனித சார்லஸ் சபை அருட்கன்னியர்கள், அம்பிய பொறுப்பாளர்கள் ஆலோசனை குழுவினர் வேதியர்டேவிட், விழாக் குழுவினர், பாடகற்குழுவினர்கள், இறைமக்கள் பலர் செய்து வருகின்றனர்.

செப்டம்பர் 8 ஆம் தேதி 96 ஆம் ஆண்டு பெருவிழா மற்றும் தேர்பவனியுடன்நிறைவுபெறுகிறது தொடக்க நாளான 29ம் தேதி மாலை 6.30 மணியளவில் ராணிப்பேட்டை சிறுமலர் மடம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வாளகத்திலிருந்து புனித நீரால் அர்ச்சிக்கப்பட்ட புனித அரோக்கிய அன்னையின் திருக்கொடியை முக்கிய வீதிகள் வழியாக ஊர்வல

# திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள்



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் நாள் பல்நோக்குகூட்டரங்கில் மாவட்டஆட்சித் தலைவர் ச.கவிதா பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு அதற்கு உரிய தீர்வு காண சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்திரவிட்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் கே.வி.ராஜ்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி) வெங்கடேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் உஷாராணி, மாவட்ட வழங்கல் அலுவலர் முத்துலட்சுமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) வேல்முருகன் மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.




## இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் ந.ப்ரியா ரவிச்சந்திரன் தலைமையில்

# பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத்திட்டம் விரிவாக்கம் குறித்து முன்னேற்பாடுகள் தொடர்பான ஆய்வு கூட்டம்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (31.08.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இராணிப்பேட்டை மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக/நகர்புற வாழ்வாதார இயக்கம், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம், ஊரகம், பேரூராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் வரும் செப்டம்பர் 17 ஆம் தேதி அன்று 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவ மாணவியருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் விரிவாக்கம் செய்து துவக்கி வைக்க உள்ள நிலையில் இத்திட்டம் குறித்து முன்னேற்பாடுகள் செய்ய ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சமையல் கூடங்களின் தற்போதைய நிலை, தண்ணீர் வசதி, மின் வசதி தயார் நிலையில் இருக்க வேண்டியும் மாணவ மாணவியருக்கு உணவு சமைக்க பாத்திரங்கள் உணவு உண்ண தட்டு மற்றும் டம்ளர்கள் கொள்முதல் செய்வது குறித்தும் சமையல் பொருட்கள் அனைத்தும் தயார் நிலையில் இருக்க தெரிவிக்கப்பட்டது.

இதில் இணை இயக்குநர், (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திருமதி.ச.செல்வராணி, இணை இயக்குநர் (தமிழ்நாடு மாநில ஊரக / நகர்புர வாழ்வாதார இயக்கம்) திரு.பெரியசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு), உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), அனைத்து உதவி திட்ட அலுவலர்கள் (மாநில ஊரக வாழ்வாதாரஇயக்கம்), அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி செயல் அலுவர்கள், வட்டார இயக்க மேலாளர்கள், சமுதாய அமைப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பூந்தமல்லியில்

# 5 கிலோ கஞ்சா பறிமுதல் - ஒருவர் கைது

தமிழ்நாடுமுதலமைச்சர்போதைப்பொருள்ஒழிப்பு நடவடிக்கையாகவும், ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் உத்தரவுபடியும், காவல் இணை ஆணையாளர் மருத்துவர் ஆர்.சிவகுமார் மேற்பார்வையில், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் உதவி ஆணையாளர் களியசுந்தரம் வழிகாட்டுதலின்படியும், பூந்தமல்லி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் பிரபு தலைமையிலான போலீசார் கஞ்சா விற்பனை தொடர்பான தகவலின் பேரில் பூந்தமல்லி S.A. பொறியியல் கல்லூரி பாலம் அருகே கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமாக இருந்த மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஜீவா (வ/21) என்பவரிடம் விசாரணை மேற்கொண்டு, சோதனை செய்ததில் அவரிடமிருந்து 05 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. மேலும் விசாரணையில் குற்றவாளி கஞ்சாவை ஒடிசா மாநிலத்தில் இருந்து வாங்கி வந்தது தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து குற்றவாளியை கைது செய்து, பூந்தமல்லி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் வழக்குப்பதிவு செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



# NDPS சட்டம் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் பொது ஏலம் அறிவிப்பு

இராணிப்பேட்டை மாவட்டத்தில், வேலூர் சரக போதைப்பொருள் ஒழிப்புக் குழுவினரால் போதைப் பொருள் குற்ற வழக்குகளில் தொடர்புடைய 16 இரண்டு சக்கர வாகனங்கள் கைப்பற்றப்பட்டு, பொது ஏலம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வாகனங்கள் வருகின்ற 03.09.2026 தேதியன்று, இராணிப்பேட்டை ஆயுதப்படை மைதானத்தில், இராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் தலைமையில் ஏலம் விடப்படும். ஏலத்தில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் 03.09.2026 தேதி அன்று காலை 08 மணி முதல் 09 மணிவரை ஆயுதப்படை வளாகத்தில் மேற்படி வாகனங்களை பார்வையிட்டு வாகனங்களுக்கு ஏல முன்பணம் செலுத்தி காலை 10 மணிக்கு நடைபெறும் பொது ஏலத்தில் கலந்து கொள்ளலாம். அரசு நிர்ணயித்த மதிப்பீட்டு தொகைக்கு, அதிகபட்சமாக ஏலம் கோருவோருக்கு வாகனங்கள் ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

# உத்தமபாளையத்தில் தொடர் விபத்துகளை தடுக்க புதிய புறவழிச்சாலை

## சட்டசபையில் கம்பம் எம்.எல்.ஏ. வலியுறுத்தலுக்கு அமைச்சர் பதில்

தேனி மாவட்டம் உத்தமபாளையம் – கம்பம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள புதுப்பட்டி பகுதியில் தொடர்ந்து கடுமையான விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. இந்த விபத்துகளால் பல உயிர்கள் பலியாவதும், பொதுமக்கள் பெரும் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய சூழலும் நிலவி வருகிறது. இப்பிரச்சினைக்கு உடனடி தீர்வு காணும் வகையில், தமிழக சட்டசபையில்பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை மீதான விவாதத்தின் போது, கம்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெகநாத் மிஸ்ரா கோரிக்கை ஒன்றை முன்வைத்தார். அப்போது பேசிய அவர், "தேனி மாவட்டத்தில் தேவதானப்பட்டியில் இருந்து குமுளி வரையிலான 4 வழிச்சாலை திட்டத்திற்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, தற்சமயம் 2 வழிச்சாலையாக பணிகள் நிறைவுற்றுள்ளன. இருப்பினும், உத்தமபாளையம் மற்றும் புதுப்பட்டி இடைப்பட்ட பகுதியில் போக்குவரத்து நெரிசல் மற்றும் தொடர் விபத்துகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. எனவே, பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, உத்தமபாளையத்தில் இருந்து உடனடியாக ஒரு புதிய புறவழிச்சாலைஅமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.



இதன் மூலம் விபத்துகளை முற்றிலுமாக கட்டுப்படுத்துவதுடன், சீரான போக்குவரத்துக்கும் வழிவகுக்க முடியும்" என்று வலியுறுத்தினார். இதற்குப் பதிலளித்து பேசிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, உத்தமபாளையம் பகுதியில் விபத்துகளை தடுக்கவும், சீரான போக்குவரத்தை உறுதி செய்யவும் புறவழிச்சாலை அமைப்பதற்கான முதற்கட்ட மற்றும் அத்தியாவசிய பணிகள் அனைத்தும் முழு வீச்சில் நடைபெற்று வருவதாகவும், விரைவில் இதற்கான தகுந்த நடவடிக்கைகள் எடுத்து தீர்வு காணப்படும் என்றும் சட்டசபையில் உறுதியளித்தார்.

# செங்குன்றம் சுற்றவட்டார வங்கி, ஏடிஎம், தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் செக்யூரிட்டிகளுடன் காவல்துறை ஆலோசனை






ஆவடி காவல் ஆணையரக ஆணையாளர் டி.செந்தில்குமார் ஆணைக்கிணங்கதுணை ஆணையர் மருத்துவர் ஆர். சிவக்குமார் உத்தரவின்பேரில் செங்குன்றம் காவல் மாவட்ட துணை ஆணையர் மகேஸ்வரி அறிவுறுத்தலின் பேரில் செங்குன்றம் காவல் மாவட்டத்திற்குட்பட்ட வங்கி, ஏடிஎம், தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் செக்யூரிட்டிகளுடன் காவல்துறை ஆலோசனைக் கூட்டம் செங்குன்றம் காவல் சரக உதவி ஆணையர் பிராங்க் டி ரூபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் பொழுது, ஏடிஎம், வங்கிக்ள், தனியார் நிறுவனங்களில் காவலர்களாக பணியாற்றும் பொழுது, இரவு நேரங்களில் சந்தேகப்படியான நபர்கள், திருடர்கள் என்று தெரிய வந்தாலோ அல்லது குற்றங்கள் ஏதாவது நடைபெறுகின்றது என்ற தெரிந்தாலோ அவர்கள் குறித்து உடனடியாக காவல்நிலையத்தில் புகார் தெரிவிக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

செங்குன்றம் காவல் சட்ட ஒழுங்கு ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி அனைவரையும் வரவேற்றார். காவல் ஆய்வாளர்கள் சோழவரம் காவல் ஆய்வாளர் கிளாஸ்டின் டேவிட், மீஞ்சூர்குற்றவியல் ஆய்வாளர் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செங்குன்றம் காவல் மாவட்டத்திற்குட்பட்ட செங்குன்றம், சோழவரம், பொன்னேரி, மீஞ்சூர் உள்ளிட்ட பகுதி செக்யூரிட்டிகள் 100க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு தங்களது கருத்துகளை பரிமாறிக் கொண்டனர். இதில் உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் கலந்துகொண்டனர். செங்குன்றம் குற்றவியல் ஆய்வாளர் பரிபூரணம் அனைவருக்கும் நன்றி நவின்றார்.

# TNPSC GroupII தேர்வுக்கு இலவச பயிற்சி வகுப்புகள்

## செப்.1 முதல் தொடக்கம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) சார்பில் தொகுதி II பணியிடங்களுக்கான முதல்நிலைத் தேர்வுக்கு 11.08.2026 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இத்தேர்வுக்கு பட்டப் படிப்பு முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். தேர்வு தொடர்பான முழுமையான விவரங்களை "TNPSC அதிகாரப்பூர்வ இணையதளம்" (https://referenceurl citation.invalid/0) மூலம் தெரிந்து கொள்ளலாம்.

இந்நிலையில், திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தின் தன்னார்வ பயிலும் வட்டம் சார்பில், TNPSC GroupII தேர்வுக்கு செப்டம்பர் 1, 2026 முதல் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன.

திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை, தினமும் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை சிறந்த பயிற்றுநர்களைக் கொண்டு 'டிஜிட்டல் போர்டு' மூலம் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன. பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் நேரடியாக தொடர்பு கொண்டோ அல்லது 04175233381 என்ற அலுவலக தொலைபேசி எண்ணில் தங்களது பெயரைப் பதிவு செய்தோ பயன்பெறலாம் என திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

### தீபத்திருவிழா முன்னேற்பாடு முதல் குடிநீர், சாலைப் பணிகள் வரை:

# திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து விரிவான ஆய்வு

திருவண்ணாமலை மாவட்டத்தில் அனைத்து அரசுத் துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம், மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநருமான தீபக் ஜேக்கப் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனாகார்க் முன்னிலையில் இன்று (31.08.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

கூட்டத்தில், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் கீழ் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் பள்ளிகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை, முதலமைச்சரின் அறிவிப்பின்படி 6, 7 மற்றும் 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கு திட்டத்தை விரிவுபடுத்த வதற்கான முன்னேற்பாடுகள், சமையல் மேற்கொள்ளத் தேர்வு செய்யப்பட்ட இடங்கள் மற்றும் தேவையான உபகரணங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அனைத்து பள்ளிகளிலும் தேவையான முன்னேற்பாடு பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து தயார் நிலையில் வைத்திருக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், 2026 திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் தீபத்திருவிழாவை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் 'தாய் மாமன் தங்க மோதிரம்' திட்டம், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் செயல்பாடுகள், அடிப்படை வசதிகள் மற்றும் மாவட்டம் முழுவதும் நடைபெற்று வரும் மருத்துவத்திட்டப் பணிகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

திருவண்ணாமலை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர்வடிகால், குடிநீர் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகள், நெடுஞ்சாலைத்துறை திட்டப் பணிகள், குடிமைப் பொருட்கள் விநியோகம் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை குறித்தும் அதிகாரிகளிடம் கேட்டறியப்பட்டது.

சாத்தனூர், குப்பநத்தம், செண்பகத்தோப்பு மற்றும் மிருகண்டா அணைகளின் கொள்ளளவு மற்றும் தற்போதைய நீர்மட்டம் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டனர்.

வேளாண்மைத்துறை சார்பில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள், இதுவரை எட்டப்பட்டுள்ள முன்னேற்றம், விதைகள், உரங்கள்மற்றும் விவசாய இயந்திரங்களின் கையிருப்பு குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சிகளின் சார்பில் தெருவிளக்குகள் பராமரிப்பு, குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறியப்பட்டது. குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாமல் பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்குவதற்கான பணிகளை தொடர்ந்து கண்காணித்து மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.





நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் மாநகராட்சி, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் நடைபெற்று வரும் குடிநீர் திட்டப் பணிகள், சாலை மேம்பாடு, திடக்கழிவு மேலாண்மை மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

வருவாய்த்துறை சார்பில் இணையவழி சான்றிதழ்கள் வழங்குவதில் உள்ள நிலுவைகள் வட்டம் வாரியாக ஆய்வு செய்யப்பட்டன.

குறிப்பாக, சாதிச் சான்றிதழ்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படக்கூடாது என்றும், பட்டா தொடர்பான மனுக்களுக்கு விரைந்து தீர்வு காண வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், பிற்படுத்த ப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் தங்கும்சமூகநலவிடுதிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை, சேர்க்கை நிலவரம், படுக்கைவசதி, உணவு, குடிநீர்உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

காவல்துறை சார்பில் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள், இதுவரை கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள், போதைப்பொருள் குற்றங்களில் ஈடுபட்டவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறியப்பட்டது.

பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே போதைப்பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வை மேலும் ஏற்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. 'சிங்கப்பெண்' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் இதுவரைபதிவுசெய்யப்பட்ட வழக்குகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. சமூகநலத்துறை சார்பில் குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்து, பொதுமக்களிடையே குழந்தைத் திருமணத் தடுப்பு விழிப்புணர்வை தீவிரப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா.உதயகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் அ.சிவசுப்பிரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் பூ.காஞ்சனா, வருவாய் கோட்டாட்சியர்கள் செல்வம் (திருவண்ணாமலை), சிவா (ஆரணி), கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பார்த்திபன், திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையர் பாலசுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராமகிருஷ்ணன், அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் இணை ஆணையர் பரணிதரன் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாவட்ட நிலை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## டாக்டர் கோபாலுக்கு சிறந்த மருத்துவர் விருது

லயன்ஸ் இன்டர்நேஷனல் மாவட்டம் 3241ஏ சார்பில் மருத்துவர்களை கௌரவிக்கும் விதத்தில் மருத்துவர் தின விழா மாவட்டத் தலைவர் வி.நாகராஜன் தலைமையில் சென்னை சேலையூர் எஸ்டிபி கிராண்ட் பேலஸில் நடைபெற்றது. மாவட்ட ஆளுநர் ஆர்.நரசிம்மன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு செங்குன்றம் எழில் டயாபட்டிக் மருத்துவமனை இயக்குநரும் செங்குன்றம் இந்தியன் மெடிக்கல் அசோசியேஷன் தலைவருமான மருத்துவர் என்எம்டி. கோபாலுக்கு சிறந்த மருத்துவர் விருதை வழங்கி கௌரவித்து சிறப்புரையா ற்றினார்.

இந்நிகழ்வில் உடனடி ஆளுநர் பி.மணிசேகர், முதல் நிலை ஆளுநர் பி.ஜெயக்கொடி, இரண்டாம் நிலை ஆளுநர் எஸ்.பாலசுப்பிரமணியன், மாவட்ட செயலாளர் ஜி.ஆறுமுகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கனவு ஆசிரியர் அமைப்பு இயக்குநர் தாமரைக் கண்ணன், காமராஜர் தினம் மாவட்டத் தலைவர் ரூபி மனோகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினர். இதில் லயன்ஸ் சங்க மாவட்ட, மண்டல, வட்டார, சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பள்ளி நேரத்திற்கு பஸ்சை இயக்காததால் கிராம மக்கள் சாலை மறியல் போராட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி அடுத்த கோணேகவுண்டனுார் கிராமத்திற்கு, தினமும் கிருஷ்ணகிரியில் இருந்து அரசு டவுன் பஸ் எண், 51, காலை, 9:30 மணிக்கும், மாலை, 5:30 மணிக்கும் சென்று வருகிறது. நேற்று முன்தினம், அமைச்சர் அருண்ராஜ், இந்த டவுன் பஸ்சை வேறு கிராமத்திற்கு கூடுதலாக சென்று வர, பஸ்சை துவக்கி வைத்தார்.

இதனால் தினமும் கோணேகவுண்டனுார் கிராமத்திற்கு வழக்கமாக மாலை, 6:00 மணிக்கு வர வேண்டிய பஸ், இரவு 7:30 மணிக்கு வந்ததால், பள்ளி முடிந்து மாணவ, மாணவியர் வீட்டிற்கு தாமதமாக வந்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த கிராம மக்கள் நேற்று காலை, அவ்வழியாக வந்த அரசு பஸ்சை முற்றுகையிட்டு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களிடம் வேப்பனஹள்ளி போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பின்னர் அதிகாரிகள், வழக்கமான நேரத்தில் மீண்டும் டவுன்பஸ்சை இயக்குவதாக உறுதியளித்ததை தொடர்ந்து பொதுமக்கள் போராட்டத்தை கைவிட்டனர். இதனால் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# வைக்கோல் சந்தையை அழித்தது ஏன்? ஏழை வியாபாரிகளுக்கு நீதி எங்கே?

## எம்.எல்.ஏ.வை நோக்கி சரமாரி கேள்வி; ஆர்கே அறக்கட்டளை தலைவர் மோகன் கிருஷ்ணா ஆவேசம்!

ஏழை வியாபாரிகளின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய வைக்கோல் சந்தை கடைகள் அகற்றப்பட்ட விவகாரம் மீண்டும் கே.ஜி.எஃப். நகரில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஒருபுறம் பல ஆண்டுகளாக வியாபாரம் செய்து வந்த ஏழை மக்களின் கடைகள் அகற்றப்படுகின்றன...

மறுபுறம் நகராட்சிக்கு சொந்தமான கடைகள் பல ஆண்டுகளாக பயன்பாடின்றி மூடிக்கிடக்கின்றன...

இதற்கு என்ன காரணம்?

மக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்ட கடைகள் ஏன் வியாபாரிகளுக்கு வழங்கப்படவில்லை? நகராட்சிக்கு வருவாய் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் ஏன் பயன்படுத்தப்படவில்லை?

என்ற கேள்விகளை முன்வைத்து ஆர்கே அறக்கட்டளை தலைவர் மோகன் கிருஷ்ணா நகராட்சி நிர்வாகத்தையும், சம்பந்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகளையும் நோக்கி சரமாரியாக கேள்வி எழுப்பியுள்ளார்.

கே.ஜி.எஃப். வைக்கோல் சந்தையில் 140க்கும் மேற்பட்ட கடைகள் அகற்றப்பட்டதாக கூறப்படும் நிலையில், பல ஆண்டுகளாக அங்கு சிறு வியாபாரம் செய்து தங்களதுகுடும்பத்தைநடத்திவந்தஏழைவியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக மோகன் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

வைக்கோல் சந்தைக்கு நேரில் சென்ற அவர், அங்குள்ள நிலைமைகளை ஆய்வு செய்தார்.

அப்போது,

“பல ஆண்டுகளாக இந்த இடத்தில் வியாபாரம் செய்து வந்த ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை பறித்துவிட்டு அவர்களை வெளியேற்றுவது எந்த வகையான நியாயம்?”

என்று அவர் கேள்வி எழுப்பினார்.

வியாபாரிகளுக்கு மாற்று ஏற்பாடுகளை செய்து கொடுக்காமல் கடைகளை அகற்றியிருந்தால், அது குறித்து அதிகாரிகள் முழுமையாக விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதைத்தொடர்ந்து அவர் சைக்கிள் ஸ்டாண்ட் கடைகளை பார்வையிட்டார்.

பல ஆண்டுகளாக சைக்கிள் ஸ்டாண்ட் பயன்பாடு இல்லாமல் மூடிக்கிடப்பதாகவும், அதனுடன் தொடர்புடைய நகராட்சிக்கு சொந்தமான கடைகளும் பயன்படுத்தப்படாமல் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இங்குதான் மோகன் கிருஷ்ணா முக்கியமான கேள்வியை எழுப்பினார்.

“சைக்கிள் ஸ்டாண்ட் கடைகள் நகராட்சிக்கு சொந்தமானவை என்றால், அவை ஏன் பல ஆண்டுகளாக மூடிகிடக்க வேண்டும்?”

“கடைகள் இருக்கின்றன...

கட்டிடங்கள் இருக்கின்றன...

வியாபாரம் செய்யக்கூடிய இடம் இருக்கிறது...

ஆனால் அவை மட்டும் ஏன் பூட்டி வைக்கப்பட்டுள்ளன?”

என்று அவர் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கடைகளை விதிமுறைகளுக்கு உட்பட்டு ஏழை வியாபாரிகளுக்கு வாடகைக்கு வழங்கினால், ஒருபுறம் வியாபாரிகளுக்கு வாழ்வாதாரம் கிடைக்கும் என்றும், மறுபுறம் நகராட்சிக்கு நிரந்தர வருவாய் கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

“நகராட்சிக்கு வருவாய் தேவை என்று கூறுகிறார்கள். ஆனால் நகராட்சிக்கு சொந்தமான கடைகளையே பூட்டி வைத்திருந்தால் வருவாய் எப்படி வரும்?”

என்று மோகன் கிருஷ்ணா கேள்வி எழுப்பினார்.

இதேபோல் காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கடைகள் குறித்தும் அவர் கடும் கேள்விகளை முன்வைத்தார்.

பேருந்துநிலையம்என்பதுபொதுமக்கள்தொடர்ந்து வந்து செல்லும் முக்கியமான இடம்.

அங்கு வணிக நடவடிக்கைகளுக்கு வாய்ப்பு இருந்தும், நகராட்சிக்கு சொந்தமான சில கடைகள் பயன்பாடின்றி மூடப்பட்டிருப்பது ஏன்? அந்தக் கடைகளை உரிய விதிமுறைகளின்படி வியாபாரிகளுக்கு ஒதுக்கி நகராட்சிக்கு வருவாய் ஏற்படுத்த முடியாதா?

என்ற கேள்வியை அவர் எழுப்பினார்.

“ஒருபுறம் ஏழை வியாபாரிகளிடம் கடைகள் இல்லை என்று கூறப்படுகிறது. மறுபுறம் நகராட்சிக்கு சொந்தமான கடைகள் பூட்டியே கிடக்கின்றன. இந்த முரண்பாட்டுக்கு நகராட்சி நிர்வாகம் என்ன பதில் சொல்லப் போகிறது?”

என்று அவர் ஆவேசமாக கேட்டார்.

வைக்கோல் சந்தையில் ஏழை வியாபாரிகளின் கடைகளை அகற்றுவதற்கு முன்பு, நகராட்சிக்கு சொந்தமான பயன்பாடின்றி இருக்கும் கடைகள் குறித்து நிர்வாகம் ஏன் பரிசீலிக்கவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும், வைக்கோல் சந்தையில் கட்டப்பட்டுள்ள புதிய கடைகள் குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார்.

40க்கும் மேற்பட்ட கடைகள் கட்டப்பட்டுள்ளதாக கூறப்படும் நிலையில், அவற்றில் பல கடைகள் பயன்பாடின்றி மூடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

“மக்களின் பணத்தில் கடைகள் கட்டப்படுகின்றன. ஆனால் அவை வியாபாரிகளுக்கு பயன்படாமல் பூட்டியே இருந்தால், அந்தக் கட்டுமானத்தின் நோக்கம் என்ன?”என்று அவர் கேள்வி எழுப்பினார்.

இந்த விவகாரம் தொடர்பாக அரசாங்கத்தால் விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக கூறிய மோகன் கிருஷ்ணா, விசாரணை அதிகாரிகள் எந்தவித அரசியல் அழுத்தத்திற்கும் இடம் கொடுக்காமல் நேர்மையாக செயல்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

“வைக்கோல் சந்தை விவகாரத்தில் உண்மை முழுமையாக வெளிவர வேண்டும். ஏழை வியாபாரிகளின் குரல் கேட்கப்பட வேண்டும். தவறு நடந்திருந்தால் அதற்கு பொறுப்பானவர்கள் யார் என்பதை விசாரணை வெளிக்கொண்டு வர வேண்டும்” என்றார். இதனிடையே கே.ஜி.எஃப். நகரில் நடைபெறும் சாலைப்பணிகளின் தரம் குறித்தும் மோகன் கிருஷ்ணா கேள்வி எழுப்பினார்.

பல லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் சாலைகள் சில மாதங்களிலேயே சேதமடைவதாகக் கூறிய அவர், பணியின் தரம் குறித்து அதிகாரிகள் உரிய முறையில் ஆய்வு செய்ய வேண்டும் என வலியுறுத்தினார்.

“மக்களின் வரிப்பணம் வீணாகக்கூடாது. சாலை அமைக்கப்பட்டால் அது தரமாக இருக்க வேண்டும். பணியின் தரத்தில் ஏதேனும் குறைபாடு இருந்தால் அதிகாரிகள் அதற்கான காரணத்தை மக்களுக்கு விளக்க வேண்டும்” என்றார்.

வைக்கோல் சந்தை...

சைக்கிள் ஸ்டாண்ட் கடைகள்...

காமராஜர் பேருந்து நிலையக் கடைகள்...

சாலைப் பணிகள்...

என நகராட்சியின் செயல்பாடுகள் குறித்து பல்வேறு கேள்விகளை முன்வைத்துள்ள மோகன் கிருஷ்ணா, தனது போராட்டம் எந்த ஒரு தனிநபருக்கு எதிரானது அல்ல என்றும், கே.ஜி.எஃப். ஏழை மக்களுக்காகவே இந்தக் கேள்விகளை எழுப்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

“இது என்னுடைய தனிப்பட்ட பிரச்சினை கிடையாது. ஏழை வியாபாரிகளின் பிரச்சினை. மக்களின் பிரச்சினை. அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் கேள்வி கேட்கிறேன்” என்றார்.

மேலும், சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர், நகராட்சி நிர்வாகம் மற்றும் அதிகாரிகள் இந்த விவகாரத்தில் தெளிவான விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

“என்னை எச்சரித்தாலும் நான் மக்களின் பிரச்சினையை கேள்வி கேட்பதை நிறுத்த மாட்டேன். ஏழை மக்களுக்காக குரல் கொடுப்பதில் பின்வாங்க மாட்டேன்”என்றுமோகன்கிருஷ்ணாதிட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, தனது கோரிக்கைகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் அடுத்த கட்டமாக நகராட்சி அலுவலகம் முன்பு மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வைக்கோல் சந்தை வியாபாரிகளின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுமா? அகற்றப்பட்ட கடைகளுக்கு மாற்று ஏற்பாடு செய்யப்படுமா?



சைக்கிள் ஸ்டாண்ட் கடைகள் ஏன் பல ஆண்டுகளாக மூடிக்கிடக்கின்றன என்பதற்கு நகராட்சி நிர்வாகம் பதில் அளிக்குமா?

காமராஜர் பேருந்து நிலையக் கடைகள் எப்போது பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும்?

பயன்பாடின்றி கிடக்கும் நகராட்சிக்கு சொந்தமான கடைகள்ஏழைவியாபாரிகளுக்குவிதிமுறைகளின்படி வழங்கப்படுமா?

வைக்கோல் சந்தை விவகாரத்தில் அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் குழு உண்மையை வெளிக்கொண்டு வருமா?

என்ற பல்வேறு கேள்விகள் தற்போது கே.ஜி.எஃப். மக்களிடையே எழுந்துள்ளன.

“ஏழை வியாபாரிகளுக்கு நீதி கிடைக்க வேண்டும்... நகராட்சிக்கு சொந்தமான கடைகள் பயன்பாட்டுக்கு வர வேண்டும்...மக்களின் பணம் வீணாகக்கூடாது... மக்களின் கேள்விகளுக்கு பதில் கிடைக்க வேண்டும்...”

என்ற கோரிக்கையை முன்வைத்து, ஆர்கே அறக்கட்டளை தலைவர் மோகன் கிருஷ்ணா தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார்.

கோரிக்கைகளுக்கு உடனடி தீர்வு இல்லை என்றால் நகராட்சி அலுவலகம் முன்பு மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என்ற அவரது அறிவிப்பு, தற்போது கே.ஜி.எஃப். அரசியல் மற்றும் பொதுவட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வைக்கோல் சந்தை விவகாரம் எந்த முடிவுக்கு செல்லும்? ஏழை வியாபாரிகளுக்கு எப்போது நீதி கிடைக்கும்? சைக்கிள் ஸ்டாண்ட் கடைகளும், காமராஜர் பேருந்து நிலையக் கடைகளும் எப்போது திறக்கப்படும்? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மக்களுக்காக குரல்...ஏழைகளுக்காக போராட்டம்... நியாயம் கிடைக்கும் வரை கேள்வி தொடரும்!

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA